# திராவிடன்

ஆசிரியர் : என்.வி.என்.

"அண்ணாவுடன் நான்" (2-ம் பக்கம்)

29—6—63
10 பக்கங்கள்

வார இதழ்

16 காசு.

# அண்ணாவுடன் நான்

## திருவண்ணுமலையில் பெரியார் - ஆச்சாரியார் !

17

என். வி. என்.

திருமதி. மணியம்மையாரைத் தாம் திருமணம் செய்துகொள்ளும் ஏற்பாட்டில் மூனைந்த பெரியார் அவர்கள், இதுபற்றி சட்ட அடிப்படையில் ஏதாவது சிக்கலேற்படுமா என்பதை அறிந்துகொள்ள அன்று கவர்னர் ஜெனரலாயிருந்த திரு. ஆச்சாரியார் அவர்களுடன் தந்தி மூலமும் மடல் மூலமும் டெல்லிக்குத் தொடர்புகொண்டிருந்தார்.

ஆச்சாரியார் அவர்களிடம் தாம் கொண்டிருந்த இத்தொடர்பைப்பற்றி எங்களிடம் பெரியார் அவர்கள் கூறியிருந்தது என்ன தெரியுமா ?

''ஆச்சாரியார் அவர்கள் கவர்னர் ஜெனரல் பதவியிலிருந்து விரைவில் விலகித் தாயகத்திற்கு வந்துவிடப்போவதாகவும், வடநாட்டிலுள்ள பெரிய காங்கிரஸ் தலைவர்கள், ஆச்சாரியார் அவர்களை முன்புபோல மதிப்பதில்லையென்றும், எனவே தமிழக அரசியலில் புதியதோர் சக்தியை அதாவது வடநாட்டு ஆதிக்க எதிர்ப்பு உணர்ச்சியை உண்டாக்க ஆச்சாரியார் எண்ணி அதற்காக நமது துணையையும் எதிர்பார்த்து நம்முடன் கடிதப் போக்குவரத்து வைத்திருக்கிருர்'' என்றும் கூறினுர் !

உண்மையிலேயே அப்போது ஆச்சாரியாருக்கும், பண்டித நேரு, ராசேந்திரபிரசாத் போன்ற தலைவர்களுக்கும் அபிப்ராய பேதமிருந்துவந்ததால் பெரியார் அவர்கள் கூறியதை நானும் மற்ற தோழர்களும் மனதார நம்பினுேம்.

பெரியார்—ஆச்சாரியார் மடல் போக்குவரத்து தொடர்பின் உச்சகட்டமாகத் திருவண்ணுமலையில் கவர்னர் ஜெனரல் ஆச்சாரியார் அவர்களைப் பெரியார் அவர்கள் சந்திப்பதென்று உறுதி செய்யப்பட்டது. அதன்படி ஒருநாள் முன்னதாகவே பெரியார் அவர்களும் அவரோடு மணியம்மையும் நானும் திருவண்ணுமலை வந்துசேர்ந்தோம். வழக்கம் போல தோழர். ப. உ. சண்முகம் அவர்கள் இல்லத்தில் பெரியார் தங்கினுர்கள். தமிழகத்தில் பெரியாரை வரவேற்று உபசரிக்கும் தலைசிறந்த குடும்பங்களில் தோழர் ப. உ. சண்முகம் அவர்களின் குடும்பமும் ஒன்ருகும். அவரது தாய்—தந்தையர் முதல் குடும்பத்தினர் அனைவரும் பெரியாரிடத்தில் பயபக்தி உடையவர்கள் என்ருல் மிகையாகாது. அதிலும் கவர்னர் ஜெனரல் ஆச்சாரியாரைச் சந்திக்க வந்துள்ள இதுசமயம் அவர்களது, உபசரிப்பும் ஏற்பாடும் சொல்லவும்வேண்டுமோ !

அப்போது தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் திருவண்ணுமலை நகரசபைத் தலைவராகவுமிருந்தார். அடுத்த நாள் திருவண்ணுமலை வந்துசேரும் கவர்னர்ஜெனரல் ஆச்சாரியார் அவர்கள், முதன்முதலாகப் பெரியாருக்கும், அடுத்து நகரசபைத் தலைவர் (ப. உ. ச.) அவர்களுக்கும், அதற்கடுத்து மாவட்ட கலெக்டருக்கும், அதற்கடுத்ததாக அன்றைய தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவராயிருந்த காமராசர் அவர்களுக்கும் என்பதாகப் பேட்டிகள்தர ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அதிகாலை 6-மணிக்கே தனி ரயிலில் கவர்னர் ஆச்சாரியார் திருவண்ணுமலை ரயில்வே நிலையம் வந்துசேர்ந்தார். திருவண்ணுமலையே விழாக்கோலம் பூண்டது. கதர்ச் சட்டைத் தோழர்களும் கருப்புச் சட்டைத் தோழர்களும் மகிழ்ச்சியுடன் வீதிகள் தோறும் காணப்பட்டனர்.

காலை 5-30 மணிக்கே பெரியார் அவர்கள் மணியம்மை, தோழர் ப. உ. சண்முகம் ஆகியோரையும் என்னையும் காரில் அழைத்துக்கொண்டு திருவண்ணுமலை ரயில்வே நிலையம் சென்ருர்கள். வழிநெடுக மக்கள் ஆரவாரமும் வாழ்த்தொலியும் எழுப்பப்பட்டன. சரியாக 6-மணிக்குப் பெரியார் அழைக்கப்பட்டார்.

கவர்னர் ஜெனரல் ஆச்சாரியார் தம்முடைய அந்தரங்க செயலாளரையும் அனுப்பிவிட்டுத் தனியாக ரயில் பெட்டியிலேயே அமர்ந்திருந்தார். பெரியார் ரெயில்வே நிலையத்திற்குள் சென்றதும் ரெயில் பெட்டியிலிருந்தவாறே பெரியாரை வரவேற்று அவரது அருகில் உட்காரவைத்துக்கொண்டு, தாளிட்டுக்கொண்டார். அவர்கள் இருவரைத்தவிர வேது யாரும் அவர்களுடன் இல்லை. ஏறத்தாழ அரை மணி நேரம் பேசினர். பிறகு பெரியார் அவர்கள் புன்முறுவலுடன் வெளியே வந்தார். ஆச்சாரியாரும் ரயில் பெட்டியின் படியில் நின்று சிரித்தவாறே வழியனுப்பினுர்.

பெரியார் காரில் ஏறியதும் நேராக காரை ப. உ. சண்முகம் அவர்களின் இல்லத்திற்கு விடச் சொன்னுர். இதற்கிடையே ஆச்சாரியாருடன் என்ன பேசினுர் என்பதை அறிய எங்களுக்கு மிகுந்த ஆவல்! என்ன பேசினுர் என்று கேட்டோம். எல்லாம் நாம் நினைத்தபடிதான்—அவர் நமது உதவியை எதிர்பார்க்கிருர் என்ருர் பெரியார் !

எங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி! அச்சாரியாரும் வடநாட்டு ஆதிக்கத்தை உணரும் காலம் வந்ததேயென்று !

வீடுவந்து சேர்ந்ததும், மேலும் விவரம் கேட்டோம்! சொல்லுவதற்குள் அவசரமா என்ருர் பெரியார்! நாங்கள் உடனே சென்னை புறப்பட ஆயத்தமானுேம்! மறுபடியும் நான் விவரம் கேட்டேன். அண்ணுவுக்கு இதுபற்றி தெரிவிக்கவேண்டுமே என்னதான் விவரம் கூறுங்கள் அய்யா என்றேன்.

அண்ணுதுரை கேட்டால் சொல்லுங்கள், ஆச்சாரியார் பதவியிலிருந்து விலகியதும், அல்லது வடநாட்டுக்காரர்கள் விரட்டியதும் நம்முடன் சேர்ந்து அவர்களை எதிர்க்க விரும்புகிருர், அதற்காகத்தான் என்னை நேரில் கண்டு பேசவேண்டும் என்று துடியாய்த் துடித்தார். இதுதான் விஷயம் என்ருர் !

நான் உண்மையிலேயே பெருமிதம்கொண்டேன். நமது கழகத்தின் சக்தி இப்போதுதான் ஆச்சாரியாருக்கு புரிந்தது போலும் என்று !

பிறகு சென்னைவந்து சேர்ந்ததும், அறிஞர் அண்ணு அவர்களைச் சந்தித்தேன். பெரியார்—ஆச்சாரியார் சந்திப்பு விவரத்தைக் கேட்டார். பெரியார் சொன்ன விவரங்களை அப்படியே அதுமட்டுமல்ல, ''நீங்கள் என்ன அண்ணு எப்போது பார்த்தாலும் சோர்வாகயிருக்கிறீர்கள். நமது கழகத்தின் சக்தி ஆச்சாரியாருக்குக்கூட புரிகிறது. நீங்கள்தான் உற்சாகமாக இல்லை''—என்று பெருமிதத்தோடு கூறினேன்.

உடனே அண்ணு அவர்கள் மிகச்சாதாரணமாக ''அய்யா சொன்னதை நீ நம்புகிருயா'' என்று கேட்டார்.

''உங்களுக்கு இதிலுமா சந்தேகம் அண்ணு'' என்றேன்.

சந்தேகம் மட்டுமல்ல நடராசன், ஏதோ ஒரு பெரிய ஆபத்தும் எதிர்நோக்கியிருக்கிறதாக நான் யூகிக்கிறேன்—ஆனுல் இன்னது என்று எனக்குப்புரியவில்லை—என்ருர் அண்ணு !

உங்களுக்கு வரவர இயக்கப் பணியில் ஏற்படும் சலிப்புதான் அண்ணு இப்படியெல்லாம் சந்

(8-ம் பக்கம் பார்க்க)

## தலையங்கம்

மலர். 16. 29—6—63 மாலை 45

# அமைச்சர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு!

——(ம)——

**[ என். வி. என். ]**

காங்கிரஸ் கட்சியினர், நாடாளும் பொறுப்பை ஏற்றதிலிருந்து சனநாயம் என்பது வாய்ப்பந்தலாக இருக்கிறதேயன்றி, நடைமுறையில் சனநாயகத்தை ஆளும்வர்க்கம் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. அதிலும் குறிப்பாக பொதுத்தேர்தல்களில் அமைச்சர்கள் மிகத் தாராளமாகக் கலந்துகொண்டு கட்சிப் பிரச்சாரத்திலும் மற்ற நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதென்பது சர்வசாதாரணமாகி விட்டது.

அமைச்சர்களே இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் அக்கட்சியைச் சார்ந்தவர்களுக்கு அதிகார பலம் தம்பக்கம் இருக்கிறதென்ற எண்ணத்தினுல் தேர்தல் காலத்தில் கட்சிக்குக் கட்சி, அல்லது கருத்துக்குக் கருத்து விவாதம், அதிலிருந்து தக்க முடிவு காணுதல் என்பதற்கு பதிலாக அடிதடி சண்டைகள், வசைமாரிகள் போன்ற வெறுக்கத்தக்க சம்பவங்கள் நடைபெறுகின்றன.

அண்மையில் நடைபெற்று முடிந்த நாங்குனேரி, போடி சட்டமன்ற இடைத்தேர்தல்களில் இதுபோன்ற கலகங்கள் நடைபெற்று இருப்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

அதைத் தொடர்ந்து திருவண்ணுமலையிலும் அந்த வியாதி பரவியிருப்பது மிகமிக வருந்தத்தக்கதாகும். இத்தகு இழிச்செயல்களைப்பற்றி நாம் யார்மீதும் குறிப்பிட்டுக் குற்றம் சாட்டவில்லையென்ருலும் அமைச்சர்களைப் பொறுத்தவரையில் தேர்தல் கூட்டங்களில், அதைத் தொடர்ந்த பணிகளில் ஈடுபடாமலிருந்தால், தேர்தலில் போட்டியிடும் கட்சிகளுக்கிடையே இத்தகைய வெறுக்கத்தக்க சம்பவங்கள் நடைபெருமலிருக்கக்கூடும் என்பதே நமது எடுத்துக்காட்டாகும்.

அமைச்சர்கள், தேர்தல் நாளன்று வோட்டுச் சாவடிக்குள் நுழைந்து பார்வையிடுவதாகவும் சொல்லப்படுகிறது. இது உண்மையென்ருல், இதைவிட சனநாயகத்திற்கு புறம்பான செயல் வேறு இருக்கமுடியாது. எந்தக் கட்சி வேட்பாளராயினும், அந்த வேட்பாளரும்—அவரது அதிகாரம் பெற்ற ஏஜெண்டும், தேர்தல் துறை அதிகாரிகளும் தவிர மற்ற எவரும் தேர்தல் நாளன்று ஓட்டுச் சாவடிக்குள் சென்று பார்வையிடுவது சட்டப்படியோ அல்லது நியாயப்படியோ முறைதாளு என்று கேட்கிறேம்.

திருவண்ணமைத் தொகுதியில் இதுவரை நடைபெற்றுள்ள சம்பவங்களைப் பொறுத்தமட்டில் எந்தக் கட்சியினர் நியாயமாக நடந்துகொண்டார்கள்—எந்தக் கட்சியினர் முறைதவறி நடந்து கொண்டார்கள் என்பதைப்பற்றி நாம் இதுசமயம் ஆராயவோ விவாதிக்கவோ விரும்பவில்லை. எக்கட்சி நேர்மையுடன் நடந்து கொண்டிருக்கிறது என்பதைப் பொதுமக்கள் அறிந்துதான் வைத்திருக்கின்றனர்.

ஆனல் 29—6—63 அன்று தேர்தல் நடைபெறயிருக்கிறது. அன்றைக்காகிலும் அமைச்சர்கள் தேர்தல் பணியில் ஈடுபடாமல் நடுநிலையில் இருப்பார்களானல் தேர்தல் முடிவு எவ்வாருயினும், பொதுதாக சனநாயகத்தை மதித்து நடப்பதற்கும், எதிர்க்கட்சிக்குத் தரவேண்டிய நியாயமான உரிமையை ஓரளவாவது வழங்கியதற்கும் ஏற்றதாக அமையும்.

எனவே 29—6—63 அன்று அதாவது தேர்தல் நாளன்று அமைச்சர்கள் வோட்டுச் சாவடிக்குள் நுழைந்து பார்க்க ஒருக்கால் திட்டமிட்டிருப்பார்களானல், அவர்கள் அந்த எண்ணத்தை மட்டுமாகிலும் மாற்றிக்கொள்ளவேண்டும் என்று சனநாயகத்தின் பேரால் வேண்டிக்கேட்டுக்கொள்கிறேம்.

கழகத் தோழர்களுக்கு இதுசமயம் ஒரு வேண்டுகோளை விட விரும்புகிறேம். திருவண்ணுமலைத் தேர்தலில் கழகம் வெற்றியடையச் செய்வதுதான் தமக்களிக்கும் பிறந்த நாள் பரிசு என்று உளமாற கூறியிருக்கிருர் நமது அண்ணு அவர்கள். எனவே திருவண்ணுமலைத் தொகுதி கழகத் தோழர்கள் மட்டுமின்றி, பிற மாவட்டங்களிலிருந்து திருவண்ணுமலைக்குச் சென்றுள்ள கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் தேர்தல் நாளன்று காலத்தை வீணுக்காமல், எவ்வித இடையூறு விளைவிக்கப்பட்டாலும் அமைதி குன்ருமல், வேலைகளைப் பகிர்ந்துகொண்டு, வாக்காளர்களை ஓட்டுச்சாவடிக்கு அழைத்துவந்து ஓட்டுகளைப் பதிவுசெய்யுமாறு வேண்டிக்கொள்ளும் கடமையை இனிதே நிறைவேற்ற வேண்டுகிறேம்.

ஆரவாரத்தையும். முழக்கத்தையும் அன்று குறைத்துக் கொண்டு, ஆங்காங்கு கூட்டம் கூட்டமாக நின்று வேடிக்கை பார்க்காமல், அறிஞர் அண்ணு அவர்களுக்கும், நாட்டுக்கும் வெற்றிச் செய்தியைத்தரவேண்டும் என்ற கவலையுடன், கட்டுப்பாடுடன் கடமையாற்றுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேம்.

வலுச்சண்டைகள் மூட்டப்பட்டாலும், வீம்பு பேசப்பட்டாலும், அவைகளையெல்லாம் சகித்துக்கொண்டு, கழகத்திற்கு மகத்தான வெற்றியினைத் தேடித்தரும் ஆக்கப்பணியில் ஈடுபடுமாறு மீண்டும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேம்.

நமது அண்ணு அவர்கள் விரும்பிக் கேட்கும் பரிசாம்—திருவண்ணுமலைத் தொகுதியில் கழக வெற்றி என்ற தூய்மையான பரிசாம் அந்தப் பரிசினை அளிக்க நாம் அனைவருமே கட்டுப்பாடுடன் கடமை ஆற்றுவோமாக!

○



மதிப்பிற்குரிய திருவண்ணுமலை வாக்காளர்களே!

திருவண்ணுமலை சட்டமன்ற இடைத்தேர்தல் 29—6—63

○

கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு—அறநெறி

இவைகளை படைக்கலனுகக் கொண்டு

காங்கிரஸ் ஆட்சியின் எதேச்சாதிகாரத்தை முறியடிக்க

தி. மு. கழக வேட்பாளர்

**ப. உ. சண்முகம்**

அவர்களை ஆதரித்து உதயசூரியன் சின்னத்தில்

வாக்களிக்க வேண்டுகிறேம்.



# செந்தமிழுக்குத் தீமை வந்த பின்பும் இந்தத்தேகம் இருந்தொரு லாபமுண்டோ?

கோவை. க. இரத்தினம்

○

“இந்தி மனிதர்களை மந்திகளாக்கும்” என்று தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் ஒரு முறை சொன்னார். நமது நாட்டுப் பற்றையும், மொழிப் பற்றையும் அழித்து, இனப்பற்றைச் சிதைத்து தமிழர்களையெல்லாம் மந்திகளாக்கும் இந்தி நமக்கு அவசியமா? தேவையில்லை. உலகுக்கே நாகரிகம் கற்றுத் தந்த ஒப்பற்ற தமிழ் இனத்தின் வழி வந்தவர்கள் நாம். நமது மொழி அமிழ்தினும் இனியது! அப்படிப்பட்ட பெருமை மிக்க சமுதாயம் ஏதுமற்ற இந்திக்கு அடிமைப்பட்டுக் கிடக்க வேண்டுமா?

இந்தி மொழிப் பிரச்னை, ஒரு மொழிப் போராட்டம் மட்டுமல்ல, அது ஒரு கலைப் போராட்டம்; கலாச்சாரப் போராட்டம்; மானாபிமானப் போராட்டம் என்றுகூடச் சொல்வேன். இந்தி மொழி எதிர்ப்புப் போராட்டத்தின் போது எந்த ஒரு திராவிடனாலும், எந்த ஒரு உண்மைத் தமிழ் மகனாலும் தூங்கிக் கொண்டிருக்க முடியாது” என்று பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் 17—7—1948ல் சென்னையில் நடந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டில் பேசும்போது எழுச்சி பொங்கக் கூறினார்.

இன்று அவரது இந்தி எதிர்ப்பு முழக்கம் முடங்கி மூலையில் படுத்துவிட்டது! தமிழ் மொழி மீது அவருக்கிருந்த ஆர்வம் செத்துப் போய்விட்டது! காமராசர் மீது பக்திப் பாசுரங்கள் பாடித் திரிவதையே தம் பிறவிப் பெரும்பயன் என்று கருதி விட்டார்!

ஆனால் நம்மால் அப்படியிருக்க முடியவில்லை. நாம் உண்மைத் தமிழர்களாக வாழ விரும்புகின்றோம். தனது நாடும், மொழியும், பண்பாடும் சிதைக்கப்படுவதை— அழித்து ஒழிக்கப்படுவதை— எந்த ஒரு மனிதனும் அனுமதிக்க மாட்டான்.

இலட்சியவாதிக்கு இலட்சியம் தான் முக்கியம். விளைவுகளைப் பற்றி அவன் கவலைப்படுவதில்லை. அதனால்தான் இன்று தி. மு. கழகம் எப்பாடு பட்டேனும்—என்ன விலை தந்தேனும் இந்தி நுழைவைத் தடுத்திடத் துடித்து நிற்கிறது!

ஒவ்வொரு மனிதனுக்கும் 3 தாய்மார்கள் உண்டு. தன்னைப் பெற்ற தாய்; தான் தவழ்ந்து விளையாடிய அன்னை பூமி, தான் பேசி மகிழும் தாய்மொழி. பெற்ற தாயைப் பேணாதவன் ‘துரோகி’ யாகிறான். தன் அன்னை மண்ணின் இன்னலைத் துடைக்காதவனை ‘தேசத் துரோகி’ என்கிறது உலகு. தாய்மொழிக்கு வந்துற்ற இடர் களையாதவனை, மொழியைக் காட்டிக் கொடுக்கும் துரோகி என்கின்றனர் மக்கள்! ஆகவே தான் செந்தமிழுக்குத் தீமை வந்த பின்பும் இந்தத் தேகம் இருந்தொரு லாபமுண்டோ என்று முழங்குகிறது முன்னேற்றக் கழகம்!

பெரியார் அவர்கள் 1948-ல் கூறியது போல—இது வெறும் மொழிப் போராட்டம் மட்டுமல்ல. கலைப் போராட்டம்; கலாச்சாரப் போராட்டம்; மானாபிமானப் போராட்டம்! இப்போது அடங்கிக் கிடப்பவன் ஆமை! முடங்கிக் கிடப்பவன் ஊமை! நம்மாலாவதென்ன என்போன் கோழை நானென்ன செய்ய முடியும் என்று பேசுவோன் மோழை! அப்படிப்பட்டவர்கள் நமக்குத் தேவையில்லை!

காமராசர், பக்தவத்சலம் மூக்கறுக்க—இந்திக்கு காவடி தூக்குவோர் தடைகள் பொடிபட— தாயினமே! தமிழ்க் குலமே! எழுச்சி கொள்வாய்! என முரசு கொட்டுகின்றது தமிழகம்!

இந்தி நுழைந்தால் தமிழ் அழியும்! தமிழ் நாடும், அதன் பண்பாடும் அழித்து ஒழிக்கப்படும்! தன் நாடு, தன் இனம், தன் மொழி என்ற உணர்வுகள் கொல்லப்பட்டு விடும்! இதனைத்தான் விரும்புகிறது டெல்லி. வடக்கே உள்ள இந்தி வெறியர்களின் திட்டமிட்ட சதியே இந்தித் திணிப்பாகும்! ஏக இந்தியா பேசும் எத்தருக்கும் பித்தருக்கும் என்றென்றும் நாம் அடிமையாய் கிடக்க வேண்டும் என்பது டெல்லி மூலவர்களின் பேராசை.

இந்தி தேவை என்பதற்கு அவர்கள் கூறும் காரணங்களையும் சற்று ஆராய்வோம்.

1. ஆங்கிலம் அன்னிய மொழி. நம்மை அடிமைப்படுத்திய மொழி. அது நமக்குத் தேவையில்லை.

2. இந்தியாவுக்கு ஒரு பொது மொழி அவசியம். பொது மொழியாக இருப்பதற்கு இந்திக்குத் தான் தகுதி உண்டு. ஏனெனில் பெரும்பான்மை மச்களால் பேசப்படுகிற மொழி இந்தி.

முதல் காரணத்தை உணர்ச்சி பூர்வமாகப் பார்க்கும் போது சிறிது உண்மை இருப்பது போல தோன்றக் கூடும் பலருக்கு. ஆனால் ஆழ்ந்து கவனிக்கும் போது அதில் கொஞ்சம் கூட நேர்மையைக் காண முடியாது. ஆங்கிலம் அன்னியமொழி என்பதையே நாம் எதிர்க்கிறோம். ஆங்கிலம் அன்னிய மொழியானால், இத்துணைக் கண்டத்தில் வாழும் ஆங்கிலோ இந்தியர்களின் தாய்மொழி எது? நீலகிரி மலையில் வாழும் தொதவர்கள் மொழி இந்த நாட்டு மொழியாக இருக்கும் போது ஆங்கிலம் மட்டும் எப்படி அன்னிய மொழியாகிவிடும்?

ஆங்கிலம் அன்னிய மொழி என்றே வைத்துக்கொள்வோம் வாதத்துக்காக திராவிடர்களாகிய நமக்கு ஆங்கிலம் அன்னிய மொழி என்றால் இந்தியும் அன்னியமொழிதானே? ஆங்கிலம் நாளுக்குநாள் விரிந்து பெரும் வளர்ச்சியடைந்து வருகிறது. 1885-ம் ஆண்டு பம்பாயில் பலர் கூடி அகில இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையைத் தோற்றுவிப்பதற்குக் காரணமாக இருந்ததே ஆங்கிலமொழி அறிவு தானே?

இந்திய துணைக்கண்டத்தின் அரசியல் அமைப்புக்கும் தொழில் வளர்ச்சிக்கும், ஆராய்ச்சிகளுக்கும் உறுதுணை புரிந்துவருவது இந்தி மொழியா? இல்லை, இல்லை! ஆங்கிலம்தான்!

வளர்ச்சியும், கவர்ச்சியும் நிரம்பிய மொழி ஆங்கிலம். விஞ்ஞானம் போன்ற விலைமதிக்க முடியாத எண்ணரும் மணிகள் ஒளிரும் மொழி அது. எத்தகைய நுட்பமான கருத்துக்களையும் அம்மொழியில் அழகுற விளக்கமுடிகிறது. அப்படிப்பட்ட மொழியை விடுத்து ஏதுமற்ற இந்தியை ஏற்றுக்கொள்ள முடியுமா?

இரண்டாவது காரணத்தை எடுத்துக் கொள்வோம். 15 கோடி மக்களால் பேசப்படும் மொழி இந்தி; ஆகவே பொது மொழியாகும் தகுதி இந்திக்குத் தான் உண்டு என்று பேசப்படுகிறது. இது சுத்தப் பித்தலாட்டம். இந்தியில் 11-வகை இந்தி உண்டு. இப்போது நம்மீது திணிக்கப்பட்டுள்ளது ‘கடிபோலி இந்தி’. இதனைப் பேசுவோர் தொகை சுமார் ஒன்றரைக் கோடி தான்.

பெரும்பான்மையோர் ஒரு மொழியை அறிவர் என்ற காரணத்தாலேயே எல்லோரும் அதனை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று வலியத் திணிப்பது ஜனநாயகப் படுகொலையாகும். சிறுபான்மை மக்களுடைய கலை, மொழி, பண்பு இவற்றைப் பாதுகாப்பது ஒரு ஜனநாயக அரசின் கடமையாகும்.

வங்காளியர், ஒரியர், குஜராத்தியர், மராத்தியர், தமிழர், கன்னடர், மலையாளிகள், தெலுங்கர் ஆகியோருக்கு இந்தி பண்பாட்டு மொழியாக எக்காலத்தும் ஆக முடியாது. பஞ்சாபியர், ராஜஸ்தானியர், பீகாரியர், உத்தர பிரதேசத்தார் ஆகியோருக்கு வேண்டுமானால் இந்தி பண்பாட்டு மொழியாக இருக்க முடியும்.

இந்தி சினிமாப் படங்கள் தமிழகத்தில் மாதக்கணக்கில் ஓடுவதைக் கண்ட பலர், தமிழர்கள் இந்தியை சீக்கிரம் படித்துக் கொள்வர் என்கின்றனர். அரைகுறை ஆடை அலங்காரங்களும், ஆங்கிலப் படங்களைக் காப்பியடித்து ஆடும் நடனங்களையும் பார்க்கப் பலர் போகின்றனரே ஒழிய, இந்தியைக் கற்றவர்களா செல்கின்றனர்?

இந்தி சமஸ்கிருதத்துடன் தொடர்புடைய மொழியாதலால், தமிழர்களும் இந்தியை எளிதில் புரிந்துகொள்வர் என்கின்றனர். வட இந்தியர்களுக்கு இந்தியில் சொல்வதும் அவர்கள் மொழியில் பேசுவதும் ஒன்று போலிருக்கலாம். ஆனால் தென்னிந்திய மொழிகள் பேசுவோருக்கு இந்தி முற்றிலும் மாறுபட்டதாகும். ஏனெனில் தென்னிந்திய மொழிகள் சமஸ்கிருதத்தின் வழிவந்தவையல்ல. அவை தனிக்குடும்பத்தைச் சேர்ந்தவையாகும். கால்டுவெல் முதல் பண்டித நேரு வரை ஒப்புக்கொண்ட உண்மை இது.

இந்தியாவுக்கு ஒரு பொது மொழிவேண்டும்என்பதே அர்த்தமற்ற பேச்சாகும். சுவிட்சர்லாந்தில் பல மொழிகள் இருந்தும் தேசியத்திற்குக் கேடில்லை. பிரிட்டனில்கூட ஆங்கிலம், வெல்ஷ் கேலிக் மொழிகள் இருக்கிறது. பிரான்ஸ், ஸ்பெயின், ரஷ்யா, சீனா, மெக்சிகோ, மத்திய, தெற்கு அமெரிக்க மாநிலங்கள், கனடா, தென்னாப்பிரிக்கா, செக்கோஸ்லாவேக்கியா, பெல்ஜியம், ஆப்கானிஸ்தான் போன்ற பல நாடுகள் பன்மொழி ஆட்சியையே மேற்கொண்டுள்ளன. ஐ.நா. சபையில்கூட ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷ்ய, சீன, ஸ்பானிய மொழிகள் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

“மனிதனுடைய கருத்துக்களை உருவாக்குவது மொழி. மக்களுடைய மொழியை ஒட்டியே மனித இனத்தின் மனோவளர்ச்சி இருக்கிறது. ஆகவே திராவிட ரத்தம் ஓடும் ஒவ்வொருவனும் இந்த வேண்டாத இந்தி நுழைவதை எதிர்த்துப் போராடியே தீரவேண்டும்” என்று 25-ஆண்டுகளுக்கு முன்பு காஞ்சியில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் ஆந்திரத்தைச் சேர்ந்த சர். கே. வி. ரெட்டி தலைமை வகித்துப் பேசுகையில் சொன்னார்.

காங்கிரஸ் தலைவர்கள் பழைய காலத்தில் கலைகளில் பற்றுக்

(7-ம் பக்கம் பார்க்க)

# கிழிகிறது திரை, தெரிகிறது உருவம்

இன்றைய அரசியல் மேடை லாவணி கச்சேரியாக மாறிவருவதையும், அதன் நிரந்தர வாரிசுகளாக, தமிழக அமைச்சர்கள் காட்சியளிப்பதையும் நம்மால் காண முடிகிறது.

ஒருவர் ஒரு கேள்வியை எழுப்புவதும், மற்றொருவர் வேறொரு கேள்வியை கேட்பதுமாக எரிந்த கட்சி, எரியாத கட்சிக்காரர்கள் பிரச்சினையை வளர்த்துக் கொண்டே போவார்களே தவிர — அதற்கொரு முடிவு, தெளிவு, காண்பதில்லை, அதுபோலத்தான் அமைச்சர்கள் இன்றைய நிலையில் பேசி வருவதும் இருக்கிறது.

தர்க்க ரீதியாக அரசியலை அணுக வேண்டிய அமைச்சர்கள் ஒவ்வொருவரும் தனக்கென ஒரு பாணியை அமைத்துக் கொண்டு அரசியலை அணுக வேண்டிய அமைச்சர்கள், ஒவ்வொருவரும் தனக்கென ஒரு பாணியை அமைத்துக் கொண்டு அரசியலை குட்டை குழப்புகிறார்கள்.

ஒருவர், கேள்வி கேட்டு சவால் விடுவதும் மற்றொருவர், வாதங்களை சந்திக்கத் தெம்பில்லாமல் புதிய தத்துவங்களை உதிர்ப்பதும், வேறொருவர் பொருந்தாத மட்டமான உவமைகளை கூறி எதிரிகளைச் சாடுவதுமாக, மேடைக் கச்சேரி செய்து வருகிறார்கள். இத்தகையவர்களில் மூன்றாம் தரத்தைச் சேர்ந்தவர்களின் பட்டியலில் முதல் அங்கமாக திகழ்பவர்தான் தொழில் அமைச்சர்கள் கனம். வெங்கட்ராமன் அவர்கள்.

இந்திக்குக் கச்சை கட்டிக் கொண்டு வக்காலத்து வாங்கும் பச்சைத் தமிழராம் — பார் புகழ் மேதையை, 'தியாகராய நகர் இந்திப் பிரச்சார சபை 9-6-63 சொற்பொழிவின் மூலம் மிஞ்சி விட்டார் இந்த படித்த மேதை.

திரு. மொரார்ஜி தேசாயை பக்கத்தில் வைத்துக் கொண்டு இந்திக்கு வக்காலத்து வாங்கியதோடன்றி, இந்தி எதிர்ப்பாளர்களை சாடுவதின் மூலம் தன்னுடைய எசமான விசுவாசத்தை— காண்பிக்க முயன்றிருக்கிறார் திருவாளர் வெங்கடராமன்.

"நாய் மனிதனை கடித்து விட்டால் பிரசுரம் கிடைப்பதில்லை. ஆனால், மனிதன் நாயை கடித்து விட்டால் அது பெரிய விசயம். நியாயமான விசயங்களுக்கு பிரசுரம் கிடைக்கா விட்டாலும்— இந்த மாதிரி விசயங்களுக்கு பிரசுரம் கிடைத்து விடுகிறது. கிளர்ச்சி இது போன்றது ஆட்சி மொழி சட்டத்தால் இந்தியாவின் ஐக்யம் பாதுகாக்கப் படுகிறது"

தியாகராய நகர் தட்சிண இந்தி பிரச்சார சபை காந்தி மண்டப திறப்பு விழாவிற்குத் தலைமை வகித்து, தொழிலமைச்சர் வெங்கட்ராமன் பேசிய— அல்ல பிதற்றிய வாசகங்களே மேலே காணப்படுபவை.

இந்தப் பேச்சைப் படிக்கின்ற ஒவ்வொரு உணர்வுள்ள தமிழனுக்கும், ஆத்திரத்தால் மார்பு விம்மி எழாமல் இருக்க முடியாது.

புள்ளி விபரங்களை கூறி மக்களை ஏமாற்றுகின்ற வகையில் பேசி வந்த திரு. வெங்கட்ராமன், திடீரென இப்படி கீழ்த்தரமான உவமைகளைக் கூறி இந்தி எதிர்ப்பாளர்களை ஏனோ தாக்கிப் பேச ஆரம்பித்து விட்டார்.

இந்தப் புண்ணியவான்தான் ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பு திருவாரூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் "சேலத்தில் கிடைக்கின்ற இரும்பைத் தோண்டி எடுத்து, அங்கே ஏன் ஒரு இரும்புத் தொழிற்சாலையை நிறுவக் கூடாது? என்று தி. மு. கழகத்தவர்கள் கூறுகின்றார்கள். எங்களுக்குத் தெரியாதா இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்த? —அங்கே தோண்டி எடுத்த இரும்புக் கனியை மேல் நாட்டிற்கு 'ஆராய்ச்சிக்கு அனுப்பியதில், அதில் 10 சதவிகித இரும்புதான் இருக்கிறது என்றும் மிகவும் மட்டமான இரும்பு என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறிவிட்ட பிறகு நாம் என்ன செய்ய முடியும்? என அனுதாபத்தோடும் அக்கறையோடும் கூறினார். இதைக் கேட்ட மக்கள் உள்ளம் நெகிழ்ந்து, உண்மையானது, நியாயமானது என்று எண்ணிக் கொள்ளத்தான் செய்தனர்.

ஆனால், ஆராய்ச்சியாளர்கள் சேலத்தில் கிடைக்கின்ற இரும்பு தரமானது என்று கூறினார்கள் என்ற செய்தியை அண்மையில், பத்திரிகைகளில் படித்தபோது இந்தப் பித்தலாட்டக்காரர் இலைச்சோற்றில் முழு பூசணிக்காயை மறைக்க முயன்றது வெளிப்படாமல் இல்லை. தமிழ் நாட்டின் வளர்ச்சியிலே மிக அக்கறை கொண்டவர் போல் நடித்து, பித்தலாட்டப் பேச்சுக்கள் மூலம் மக்களை ஏமாற்றும் நல்லவர்தான் இந்தி எதிர்ப்பாளர்களை சாடுகிறார் கேலி புரிகிறார்!

"மனிதன் நாயைக் கடித்து விட்டால், அது பெரிய விசயம்" இந்த வாசகங்களை வைத்து— மனிதன் மாறுபட்ட செயல்களை செய்வது எப்போது? என்ற வினாவை எழுப்பினால் புத்தி தெளிவில்லாத நிலையில் என்ற பதில் கிடைக்கும்.

"நியாயமான விசயங்களுக்கு பிரசுரம் கிடைக்கா விட்டாலும் இதுபோன்ற விசயங்களுக்கு பிரசுரம் கிடைத்து விடுகிறது"— இப்படி மேலும் கூறுவதன் மூலம் இந்தியை எதிர்ப்பதும், தாய் மொழியைக் காக்க முயலுவதும் நியாயம் அல்ல என்பதோடு அதுபற்றிய விபரங்களை வெளியிடுகின்ற பத்திரிகைகளையும் தாக்குகிறார்—திருவாளர் அமைச்சர் பிரான்.

**திருவடியான்**

மொழிப்பற்று மிக்கோரே! விழி திறந்து பாருங்கள்! மொழியைக் காக்க முனைவது இந்தியை எதிர்ப்பது பைத்தியக்காரத்தனமாம், அமைச்சர் வெங்கட்ராமன் கூறுகிறார் கேளுங்கள்.

ஒரு பெண் அவமான மடைவதைப் பார்த்துக் கொண்டிருக்கிற எந்த ஒரு ஆணும், அவளுக்கு தந்தையாகவோ தனயனாகவோ — சகோதரனாகவோ— அல்லது கணவனாகவோ இருக்கலாயக்கற்றவன்" என்றார் அண்ணல் காந்தியடிகள். ஆம்; அவர் பெண்மையை அவ்வளவு உயர்வாக சிறப்புத் தன்மை பெற்றதாகக் கருதினார் செயல்பட்டார்.

'தாய்மொழி' என்ற சிறப்புப் பெயர் வரப்பட்டது எதனால்? குழந்தைக்கு, தாய் பாலூட்டி வளர்க்கும்போதே மொழியையும் ஊட்டி வளர்க்கின்றாள் என்பதற்கு மட்டுமல்ல, பெண்மையை மதிப்பது போல் 'தாய்மை'யை வழிபடுவது போல், மொழியையும் காக்கப்பட வேண்டும். போற்றப்பட வேண்டும் என்ற உன்னத நோக்காலும்தான் தாய் மொழி என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது.

காந்தியார் கூற்றுப்படி, வணக்கத்துக்கும் வழிபாட்டிற்கும் உரிய 'பெண்மை'க்கு நிகரான தாய் மொழியைக் காட்டிக் கொடுப்போரையும், இந்தி எதிர்ப்பாளர்களை இழித்துப் பேசுவதின் மூலம் தாய்மொழிக்கு துரோக மிழைப்பவர்களையும் என்னவென்றழைப்பது?

தமிழர்கள் என்று அவர்கள் சொல்லிக் கொள்வதற்கு — தமிழக அமைச்சராக இருப்பதற்கு லாயக்கற்றவர்கள் என்றுதானே மக்கள் கூறுவர்!

தாய்மொழிக்கு, தரமிக்க மொழியாம்—நமது தமிழுக்கு ஊறு வருகின்ற போது நாம் வீறு கொண்டு எழுந்து போர் முழக்கம் செய்கின்ற நேரத்தில் நம்மைப் பார்த்து கேலி புரிகிறார், உவமை காட்டி உதாசீனம் செய்கிறார்.

சில வேளைகளில் எங்களுக்கும் மொழிப்பற்று உண்டு, என பெருமையடித்துக் கொள்ளும் அமைச்சர் பெருமக்களில் ஒருவர்தான், திருவாளர் வெங்கடராமனும்.

தமிழக மக்களே! தனக்கும் மொழிப்பற்று உண்டு என்று காட்டிக் கொள்ளும் அமைச்சரின் பேச்சைப் பாரீர்! மொழி காக்க எழுகின்றவர்கள் "பைத்தியக்காரர்களாம்! அமைச்சரின் வேஷம் கலைகிறது; 'அடையாளம் கண்டு கொள்ளுங்கள். போலித் திரை கிழிகிறது உருவம் தெரிகிறது. இனம் கண்டு கொள்ளுங்கள்.

இழித்துப் பேசும் இனத் துரோகிகளுக்கு நற் பாடம் புகட்ட, நம் தாய்மொழி காக்க— வீறு கொண்டு எழுவீர்!—விழிப் புணர்ச்சி பெறுவீர்!!

●


தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற
வெண்சங்கு சீயக்காய்த் தூள்
எங்கும் கிடைக்கும்.
மணத்தில் மிகுந்த
செல்வம் ராணி ஊதுபத்திகளை
உபயோகியுங்கள்.

●
தயாரிப்பாளர்கள் :
வெண்சங்கு சீயக்காய்த்தூள் பாக்டரி
3037—38 டபீர்குளம் ரோடு, தஞ்சை

# நினைவு

•

**ஆசூர் அன்புத்தம்பி**

திராவிடமே! நான் பிறந்த தாயகமே! அறிஞர்தம் நினைவிலோர் சரம் தொடுத்த அறிவகமே! ஆற்றல்மிக்க காளையர் புடைசூழ பவனிவரும் நற்றமிழ் இலக்கிப் பெட்டகமே! உன்னை நினைத்தாலே நெஞ்சமதில் ஓர் புத்துணர்ச்சி பொங்குதம்மா! பிறப்புரிமை உணர்ச்சிதனை உன் வடிவில் எண்ணும்போது கலைஞர்கள் தரும் கருத்துக்கு அளவே கிடையாது! எத்தனையோ மேதைகளை உன்மடியில் தவழச்செய்து புகழனைத்தையும் போற்றி வளர்த்தாய்! பொற்றுமரைப் புகழ் மணக்கும் மூதாட்டியார் ஔவையின் அறவழிச் சீதனத்திற்கு உயிர் கொடுத்தாய்! வள்ளுவரை நினைத்தாலோ நெஞ்சமதில் வற்றாத ஓர் நினைப்பு! கற்றப்பயன், நற்றமிழால் உலகெங்கும் பவனிவரும் உதயசூரியனின் ஒளிக்கதிர்போல் முத்தமிழ் சுவைதந்து, பற்றுமிகும் பாசந்தனை பிணைத்துவிட்டாய்! தர்மத்தைப் பேணி வளர்த்து அதர்மத்தின் கோர சொருபங்கள் உன் மடியிலே தவழ பொறுமையுடன் இடமளித்திருக்கிறாய்! எத்தனை இரக்கம் உன் இதயத்தில், உன்னைப் பழித்து பணம் திரட்டும் பித்து மணம் கொண்டோர் இன்னும் உன் அருகில் இருக்கக்கண்டு பொறுமைப் புடைசூழ புன்சிரிப்பை அறிஞரின் நிழல் உருவில் நீ படைத்திருக்கிறாய்!

நீ வடிக்கும் கண்ணீர் நெஞ்சிலே உறுதியற்றநாசவழிப்புல்லர்களுக்கு இன்றும் புரியவே இல்லை! ஆனால் நான் மட்டும் உன்னை என் பிறப்புரிமை இலட்சியமாய் உறுதியோடு உன் வளர்ச்சிக்கு குருதிக் கொட்டவும் சித்தமாயிருக்கிறேன். ஏன் தெரியுமா?

செந்தமிழ் சுவைமணக்க உன்னைச் சுற்றி வளர்ந்த பன்னிகர் தெலுங்கு! கன்னடமும் சீதனமாய் நீ படைத்தாய்! கண்ணியத்தின் பாசறையாய் மலையாளமெனும் மொழிவளமும் துணை நதியின் பிறப்பிடம்போல் நீ அமர்ந்து துளுவெண்ணும் பிறிவுப்பரல் நீ வளர்த்த வல்லமை! அத்தனையும் நினைத்துவிட்டால் உன் சொத்துக்கள் ஏராளம்! ஏராளம்!

உன் வயிற்றில் பால் வார்த்த உத்தமர்கள் இம்மாநிலத்தின் ஒளிக்கதிர்கள்! முல்லைக்கு தேர் கொடுத்த பாரி! தன்தாய் மொழி காக்க தன்னுயிர் தர சித்தமெனக் கூறி, தன் தலையை அறுத்துதர துணிவு கொண்ட குமணன்! செத்தும் கொடை வழங்கிய ஓர் சீதக்காதி! இன்னும் எத்தனையோ கொடை குணத்தின் பிறப்பிடங்கள்! இது மட்டுமா? அறிஞர் தரும் தியாக உணர்ச்சி என் நெஞ்சில் மட்டுமல்ல எத்தனை காளையரின் உள்ளத்தில் தெள்ள ஒலிக்கும் முன்னேற்றத்தின் பாச உணர்ச்சி!

உன் புகழ்பாடி என் இதயத்தில் ஆழ்கடல்முத்தாக அமைந்துவிட்ட உன் செல்வப் புதல்வர்கள் எண்ணிக்கை எத்தனையோ லட்சம்!

கலைஞர்களும், கலைக்காவலர்களும் உன் இலட்சியத்தை பறைசாற்றும் நடிகர்களும்! உன்னை சொற்பெருக்கால் வடித்துத்தரும் நாவலர்களும் பாவலர்களும், செயல்வீரர்களும் இன்னும் சொல்லப்போனல் உன்புகழ் சிறக்க தன்னுயிர்தந்து தன்மானம் காத்த உன் தியாக திருப்புதல்வர்களும்! இசையால் இயல்கூட்டி இம்மாநிலத்தே நலம் பாடு முத்தமிழின் மேதைகளும்! நீதந்த பாசத்தின் பரிசுகள்!

அன்னியன் படை சூழ்ந்தது அங்கே, உன்புகழ் காக்க வாரி வழங்கும் கொடை வள்ளல் இங்கே! ஒரே நிலமாய் அமைந்துவிட்ட இந்தியாவின் ஒருக் கோடியில் நீ, மொழியால் கலையால், உலகம் வியக்கும் மூலப்பொருள்களின் உறைவிடமாய் வீற்றிருக்கிறாய்! உன் பொருளை கொள்ளை கொண்டு உடல் வளர்க்கும் ஒரு கூட்டம் மறுகோடியில் இருக்கிறது. ஆனல் நீ இன்னும் இரக்கமே காட்டிவருகிறாய். அதன் காரணம் எனக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் புரிந்த ஓர் கட்டுப்பாடு! அறிஞர் தரும் ஆணையொன்றுக்கே அடங்கி கிடக்கிறது வீர உணர்ச்சி! அவர் ஆணையிட்ட நேரமதில் எதுவும் செய்ய எத்தனையோ காளையர்கள் தயார். ஏன் தெரியுமா?

எல்லாம் உன்மீது கொண்ட அழிக்கமுடியாத பாசம்! இருப்போருக்கு வாரி வழங்க ஆணையிட்டது முன்னேற்ற வாழ்வின் தலைமைபீடம்! பலர் கொடுக்கும் சீதனங்களுக்கு குறைவேயில்லை.

பொன்னும் பொருளும் அள்ளித் தந்து அன்னியன் வெறியுணர்ச்சிக்கு அரசினர் விலங்குபூட்டயுத்தநிதியென்று கொடுத்துதவ முன்வந்தோர் எத்தனையோ எத்தனை! இருந்தும் இல்லாமையெனக் கூறும் கருமி குணம் படைத்த காட்டுத்தர்பார்கள் இருக்கும்போது, கொண்ட செல்வம் மற்றவர் வாழ உவகையளிக்கட்டுமே என்று கொடைவள்ளலாய், மக்கள் திலகமாய், புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். உன் புகழ் பரப்ப வாரி வழங்கிய பாதுகாப்பு நிதியை நினைத்துவிட்டால் உன்னை ஒரு மாமேதையேயென்றுதான் போற்றவேண்டும்.

தனக்கு மக்கள் தந்து பாராட்டிய பரிசுகள் அனைத்தையும் மற்றவர் வாழ கொடுத்து உதவிய அந்த கொடை வள்ளலின் மாசற்ற செய்கையை நினைக்கும் போது உள்ளமெல்லாம் ஓங்கி வளரும் புத்துணர்ச்சி! எனக்கு மட்டுமல்ல, எண்ணில் நிறைந்து எழுத்தில் வடித்து உன்னைத் தனிநாடாய் காணத்துடிக்கும் இதயங்கள் இன்றுவரை ஏராளம்! உனக்காக உயிர் கொடுக்க தன் வீர உடலை பணயம் வைக்கும் வீரக் காளையர்கள் ஆயிரமாயிரம்.

இதையெல்லாம் காணும்போது நீயே என் இலட்சியம்! நீயே என் உறைவிடம்! திராவிடநாடு என்ற தனிச்சிகரமாய் உன்னைக் காணத்துடிக்கிறேன். காரணம்?

உன்புகழ்தான். உலகம் போற்றும் உன் இயல்புதான் உனக்கு பரண் அமைக்கும் படிக்கட்டாய் நான் இருக்க சித்தமாகவே இருக்கிறேன். உன் மடியில் தவழும் உடல்—உடலில் ஒட்டி வாழும் உயிர் இவையாவும் உனக்கே சொந்தம்! எல்லாம் நீ தந்த பாசம்!

அதற்கு நான் தரும் பரிசு; உயிர், உடல், பொருள் அத்தனையும்! செந்நிறத்தை மண்ணில் பரப்பினாலும், சொந்தமும் பந்தமும் என்னைவிட்டு மறைந்தாலும் அறிஞர் காட்டும் பொறுமை கடைபிடித்தாயினும் நான் தரும் பாசத்தின் பரிசு நீ தனிநாடாய் அமையப்பெற்று, முரசுகொட்டும் திராவிடநாடு எனத் திகழ வேண்டுமென்ற ஓரே எண்ணம்!

அதுதான் என் நினைவில் நீங்காமல் என்றும் நான் திராவிடனுக்கு அளிக்கும் 'நல்லசெய்தி'.

வாழ்க திராவிடம்!

வளர்க தாயகம்!!

சூழ்க முன்னேற்ற அறிவகம்!!!

# ஆர்த்தெழுந்து செல்வோம்!

[ கலைவாணிமுத்து ]

அழைக்கின்றார், அழைக்கின்றார்;
அழைக்கின்றார் அண்ணா!
அருந்தமிழைக் காத்திடவே,
அன்புடனே இன்றே!

தழைத்தோங்குஞ் செந்தமிழை
தகர்த்திடவே ஆள்வோர்;
தகுதியிலா இந்தியினைத்
தரணியாளச் செய்தார்!

இழைத்திட்டார் நாட்டோர்க்கு
இயம்பவொணுத் துரோகம்!
இதுபொறுப்ப தில்லைநாமே
இறுதிப்போர் செய்வோம்!

மழையெனவே செங்குருதி
மண்காணப் பெய்வோம்;
மாளும்வரைப் போரிடுவோம்
மன்னுதமிழ் காக்க!

அன்னையினுக் கின்னலெனின்
அமைதிபெற லாமோ?
ஆவியினைத் தந்தேனும்
அவர்புகழைக் காப்போம்!

குன்றுப்புகழ் கொள்நாட்டின்
குமரித்தமிழ் தன்னைக்
குலைத்திடவே கொண்டுவரும்
கொடுமொழியை எதிர்ப்போம்!

இன்றளவும் நாமயலர்
அடிபணிந்த தில்லை;
இனியுமதற் கிடங்கொடுக்கா
திருந்திடவே எழுவோம்!

அன்பினுரு அண்ணாவின்
அறநெறியில் செல்வோம்;
அடக்குமுறைக் கஞ்சாது
ஆர்த்தெழுந்து செல்வோம்!

# இந்தியை எதிர்த்திட வாரீர் - நமது இன்பத் தமிழ்தனைக் காத்திட வாரீர் !

4-ம் பக்கத் தொடர்ச்சி

கொண்டவர்கள். அவர்களுடைய தேசிய வாழ்க்கைத் தத்துவங்களும் கருத்துக்களும் நம்மை துவாபரயுகத்துக்கோ, கிரேதா யுகத்துக்கோ அழைத்துப் போகக் கூடியதாக இருக்கிறது என்று வெறுப்போடு கூறினார் சர். கே. வி. ரெட்டி அவர்கள். இந்தி நுழைப்பின் மூலம் நாம் கற்காலத்தை நோக்கி நடை போடக் கூடியவர்கள் ஆவோமே தவிர, முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்க முடியாது!

இந்தி மொழியின் துவக்கமே மிகக் குறுகிய காலத்தை உடையது. 13-வது நூற்றாண்டின் ஆரம்பத்திலேதான் இந்தியின் ஆதிக்கவி எனப்படும் 'சண்ட பார்டி' என்பவர் இருந்ததாக அறிகிறோம். அவர் 'பிரிதிவிராஜ ராஸ்யூ' என்ற நூலை எழுதினார். அந்த மொழியில் அதற்கு முன் வேறு எந்த நூலும் இருந்ததாகக் காணோம் !

ஆனால் நமது தமிழ் மொழி, உலகத்தின் முதல் மொழியாகும். தமிழ் இலக்கணமாம் 'தொல்காப்பியம்' இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இயற்றப்பட்டிருக்கிறது. ஒரு மொழி நல்ல வளர்ச்சியடைந்த பின்புதான் அதற்கு இலக்கண நூல் தேவையாக இருக்கும்.

ஆகவே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே தமிழ் மொழி ஓர் உன்னத வளர்ச்சியைப் பெற்றிருந்தது என்பது தெள்ளென விளங்கும். அதுமட்டுமல்ல; தமிழ் என்றாலே இனிமை என்று பொருள். எழிலும் ஏற்றமும் நிரம்பிய மொழி தமிழ். அதன் அருகே நிற்கவும் இந்திக்கு யோக்யதை கிடையாது.

''கவிதை இயற்றும் வகைக்கு ஏற்றபடி மொழியை வளர்த்ததில் சமஸ்கிருதத்தை விட தமிழே நிகரற்றது'' என்கிறார் டாக்டர் பர்னல்.

''திராவிட மொழிகளின் இலக்கணங்களை ஒப்பிட்டுப் பார்த்தல்'' என்ற நூலை எழுதிய கால்டுவெல். ''தமிழில் கலைச் சொற்களை ஒரு கவி திடீரென இயற்றி யிருக்க முடியாது. நீண்ட நாட்களாக அவை உற்பத்தி செய்யப்பட்டு வளர்ச்சி யடைந்திருக்க வேண்டும் என்பதைக் கவனிக்கும்போது, தமிழ், மிகப் பழங் காலத்திலிருந்தே உன்னதமாக வளர்க்கப்பட்டு உச்சநிலை அடைந்தது'' என்று கூறுகிறார்.

இத்தகைய ஆதிமொழி என்ற சிறப்பு இந்திக்கு உண்டா? குறள், சிலப்பதிகாரம், அகம், புறம் போன்ற சிறப்புமிகு நூல் ஏதேனும் இந்தியில் உண்டா?

எதற்காக இங்கு இந்தி வேண்டும்? ஏன் வேண்டும்? அதனால் என்ன பயன் விளையும்? இந்தியைத் திணித்தே தீருவோம் என்று டெல்லி மூலவர்கள் பிடிவாதமாக இருப்பதன் நோக்கம் என்ன? காமராசர்கள் இந்திக்குக் காவடி தூக்கி அலைவதன் காரணம்தான் என்ன?

''நாம் எல்லோரும் இந்தியர்கள். ஆகவேதான் இந்தியை பொது மொழி ஆக்கியிருக்கிறோம். இப்பிரிவினை உணர்ச்சியைத் தடுக்கும்; ஒற்றுமையைப் பெருக்கும்'' என்கின்றனர்.

அப்படியானால் என்ன பொருள்? அரசியல் நோக்கம் உள்ளே புதைந்து கிடக்கிறது என்று அர்த்தம்! முன்னேற்றக் கழகத்தை நசுக்குவதற்கு திட்டமிடுகிறார்கள்! அவர்கள் கூற்றுப்படியே பார்த்தாலும்கூட தேச பக்தி வளரவோ, தேசீய ஒற்றுமை பலப்படவோ—ஒரு பொது மொழி அவசியந்தானா? சரித்திரம், மாறுபட்ட உண்மையைச் சொல்கிறது !

கனடாவைப் பார்ப்போம். அங்கு ஆங்கிலமும், பிரெஞ்சும் பேசப்பட்டு வருகிறது. ஆங்கிலம் தாம் கானடாவின் பொதுமொழியாக இருக்கவேண்டும் என்று வற்புறுத்த பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கே துணிவு ஏற்படவில்லை. தேசீயத்திற்கு ஒரு பொதுமொழி இருந்தே தீரவேண்டும் என்று அங்கு யாரும் கருதவில்லை.

தென்னாப்பிரிக்காவை எடுத்துக்கொள்வோம். அங்கு இரு இனத்தினர் இருக்கின்றனர். ஆங்கிலேயருக்கு ஆங்கிலம்; போயர் எனப்படும் டச்சுக்காரருக்கு டச்சு மொழி. அங்கும் ஒரு பொது மொழி வேண்டும் என்ற கருத்தைக் காணவில்லை.

சுவிட்சர்லாந்தில் மூன்று இன மக்கள் இருக்கின்றனர். அவர்கள் மூன்று மொழி பேசுகின்றனர், தேசம் ஒன்றுதான்! தேசீய ஒற்றுமையும் இருக்கிறது!! 1874-ம் ஆண்டு நிறைவேற்றிய சட்டத்தின்படி ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலியன் ஆகிய மூன்றும் தேசீய மொழிகளாக்கப்பட்டிருக்கின்றன.


நீங்கள் எந்த வேலை செய்தாலும்...

செய்யும் வேலை
நாட்டிற்காக
செய்யப்பட்டதாகும்

நீங்கள், உங்கள் வாழ்வு, செய்யும் வேலை எல்லாம் திறமை, பலம் இதற்காக பாடுபட்டு வரும் இந்தியாவின் ஒரு அங்கமாகும். உங்கள் வேலை எதுவாக இருந்தாலும் அதை திறமையுடன் செய்யுங்கள். தாமதத்தை தவிருங்கள் சுமுகமாக செயல்படச் செய்யுங்கள். செயல் திறன் உயர நம்மைப் போல் கோடிக்கணக்கானவர்களும், உழைத்து வெற்றிக்கான வழியை வகுக்கிறார்கள்.

உறுதியாக உழையுங்கள்

இந்தியாவின் அபிவிருத்திக்கும், பாதுகாப்புக்கும் அது தேவை

DA 63/F 2

அங்கு 100-க்கு 71-பேர் ஜெர்மன் மொழியும், 23 பேர் பிரெஞ்சு மொழியும், 6 பேர் இத்தாலிய மொழியும் பேசுபவர்கள் தான். ஆனாலும்கூட அங்கு மூன்று மொழிகளும் தேசியமொழிகளாக ஆக்கப்பட்டுள்ளன.

அதைப்போலவே ரஷ்யாவிலும் சிறுபான்மை மக்களால் பேசப்படும் மொழிகளும்கூட தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

இவைகளையெல்லாம் கவனிக்கும்போது, இந்தியாவுக்கு ஒரு பொது மொழி அவசியமில்லை என்ற முடிவுக்கே நாம் வருகிறோம். இந்திய துணைக்கண்டத்தில் ஒற்றுமையை ஏற்படுத்த உதவுவதற்கு ஆங்கிலத்தையன்றி இந்தியைப் பயன்படுத்த முடியாது என்பதையும் இந்திவெறியர்களுக்கு எடுத்துக்கூறுகிறோம்.

ஐரோப்பாவில் சிறுபான்மையினரின் மொழிப்பிரச்னை பல நூற்றாண்டுகளாக இருந்துவருகிறது. என்றாலும் ஒரு நாட்டின் பெரும்பான்மையினரின் மொழி, நாகரீகம் இவைகளில் சிறுபான்மையினரையும், அவர்கள் மொழி நாகரீகத்தையும் கட்டிப்பாடும் முயற்சிகள் அனைத்தும் அடியோடுதோல்வியே கண்டுள்ளன.

இந்தி பொதுமொழியாவதன் மூலம் இந்திவாலாக்களின் கை ஓங்கி நிற்கும். முன்பு இந்திய சர்க்கார் கல்கத்தாவில் இருந்த போது சர்க்கார் அதிகாரங்கள் முழுதும் வங்காளிகளிடமே இருந்தது. பின்னர் சர்க்கார் டெல்லிக்கு மாறியதும் பஞ்சாபிகளும், உத்தர பிரதேசிகளும் அதிகாரங்களைக் கைப்பற்றிக்கொண்டனர். ஆகவே தான் இந்தி பொதுமொழியானால் இந்தியாவே தங்கள் கைக்குள் இருக்கும் என்று மகிழ்கின்றனர் இந்திக்காரர்கள்!

இந்தியர்களில் பெரும்பான்மையினர் இந்தி பேசுகின்றனர் என்பதும் பொருந்தா வாதமாகும். வங்காளிகள் இந்தியை முழுக்க முழுக்க எதிர்க்கின்றனர். முஸ்லீம்கள் உருதுமொழியைத்தான் விரும்புகிறார்கள் — இந்தியை அல்ல. மராட்டிய மாநிலத்தில் உள்ள கன்னட மொழி பேசுபவர்களும், மராட்டியரும் கடுமையாக இந்தியை எதிர்க்கிறார்கள்.

ஒவ்வொரு இனத்தினருக்கும் தனித்தனி தேசீயம் உண்டு. அவர்களது தேசீயத்தை அழித்து, கலையைச் சிதைத்து வேற்று மொழியினரின் ஆதிக்கத்தை வளர்க்க—இந்தி தேசீயத்தை தமிழ் நிலத்தில் பயிரிட—எவனுக்கும் உரிமை இல்லை! அப்படிச் செய்பவன் மாபெரும் துரோகி! தமிழர்கள் உள்ளவரை இதனை அனுமதிக்கவே மாட்டார்கள்! என்ன விலை கொடுத்தேனும்—எத்தனை உயிர்களை ஈந்தேனும் இக்கொடுமையைத்தடுத்தே தீருவர்! ஆதிக்கவாதிகள் இதனை உணர்ந்துகொள்ள வேண்டும்!

மனஎழுச்சி காரணமாக நாம் இந்தியை எதிர்க்கிறோம்—என்று பலர் கூறுகின்றனர். அப்படித்தான் இருக்கட்டுமே! மன எழுச்சி காரணமாகவோ—இன உணர்ச்சி காரணமாகவோ இந்தியை எதிர்க்கிறோம் என்று சொல்லிக்கொள்ளட்டும்; கவலையில்லை. எதிர்க்கக்கூடிய மக்களின் கருத்தை மதியாது காரியங்களைச் சாதித்துக்கொள்ளத் தொடங்கினால், அதிகாரம் இருக்கிறது என்ற ஆணவம் தவிர வேறு என்ன பொருள்?

துப்பாக்கியும், துரைத்தனமும் இருக்கிறது என்ற தைரியத்தில் ஜாரின் பாதையில் நடைபோடுகிறதா ஜவகரின் ஆட்சி?

பின் ஏன் இந்த இந்தித் திணிப்பு?

○


எழில்மிக்க நடை!

எழுச்சியூட்டும் கருத்தோவியம்!

தோழர்

**வி. ஆர். மதனகோபால்**

பி.காம். அவர்களின்

புதுமைப் படைப்பு!

**அண்டனி**

**கிளியோபாட்ரா**

'திராவிடன்' 15-7-63

இதழிலிருந்து தொடங்குகிறது!

கிழமை தோறும் சிறந்த விருந்து!

○

அதிகப் பிரதிகள் தேவைப்படும் விற்பனையாளர்கள் உடனே எழுதுக!

விவரங்கட்கு :———

நிர்வாகி : 'திராவிடன்'

சென்னை-1.


## 2-ம் பக்கத் தொடர்ச்சி

தேகப்படவைக்கிறது. இவ்வளவு பேர் உற்சாகமாக அய்யா—ஆச்சாரியார் சந்திப்பை வரவேற்றிருக்கிறபோது நீங்கள் மட்டும் இப்படிப் பேசுகிறீர்கள், இது நியாயமில்லை அண்ணா — என்றேன்!

ஆச்சாரியார், அய்யாவுக்குப் பேட்டி கொடுத்த பிறகு எந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டார் என்று கேட்டார், அண்ணா!

திருவண்ணாமலை பாதாள லிங்கேசுவர் ஆலயத் திருப்பணியைத் துவக்கிவைத்தார் என்றேன் நான்.

அப்படி அவர் துவக்கி வைத்துப் பேசும்போது என்ன பேசினார் தெரியுமா? அதை ஊன்றிக் கவனித்தாயா என்று கேட்டார் அண்ணா!

என்ன பேசினார், நான் கவனிக்கவில்லை அண்ணா என்றேன்.

நமது இயக்கத்தின் உதவியை ஆச்சாரியார் உண்மையிலேயே எதிர்பார்ப்பவரானால், அதற்காக அய்யாவைக் கலந்து பேச வந்தார் என்றால், அதற்கேற்றவாறு பேசியிருப்பார் அவர்! ஆனால் ஆச்சாரியாரோ, சுயமரியாதைக் கட்சி என்பது நாட்டில் தோன்றும் பல தீமைகளில் ஒன்று! அது கடவுள் சக்தியால் அறியக்கூடியதாகும். இயற்கையாகவே விரைவில் அழிந்து போகும். என்று அவர் பேசியிருப்பாரா?— என்று கேட்டார் அண்ணா!

எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஏற்பட்ட மகிழ்ச்சியனைத்தும் ஒரு நொடியில் பறந்து விட்டது ஒரே குழப்பம்!

அய்யா ஏன் பொய் சொல்ல வேண்டும்! அப்படிச் சொல்ல வேண்டிய அவசியமில்லையே! ஆனால் அண்ணா சொல்லுவதும் நியாயமாயிருக்கிறதே—என்றெல்லாம் யோசித்தவாறேயிருந்தேன்.

உடனே அண்ணா அவர்கள், என்ன, நடராசன் நான் கேட்டதற்கு ஒன்றும் பதில் இல்லையே— என்றார்!

எனக்கு ஒன்றும் விளங்கவில்லை அண்ணா — குழப்பமாயிருக்கிறது என்றேன் நான்.

எனக்கும்கூடத்தான் இவர்கள் சந்திப்பின் மர்மம் என்னவென்று புரியவில்லை. ஆனால் அய்யா உன்னிடம் சொன்னது மட்டும் உண்மையல்ல. விரைவில் அந்த இரகசியம் அம்பலத்துக்கு வரும் என்றார் அண்ணா!

அந்த வாரம் திராவிடநாடு இதழிலும் பெரியார்—ஆச்சாரியார் சந்திப்புக் குறித்து எழுதுகையில் "திருவண்ணாமலையில் பெரியாரைச் சந்தித்துப் பேசிய பிறகு ஆச்சாரியார் பாதாள லிங்கேசுவரர் ஆலயப் பணியினைத் துவக்கி வைத்துப் பேசிய பேச்சு சுயமரியாதை இயக்கத்தையும்—இயக்கத் தோழர்களையும் இழிவுபடுத்துவதாக இருக்கிறது. அவரது போக்குக்குச் சரியான படிப்பினையைத் தர எனது உள்ளமும் எழுதுகோலும் துடித்தது! என்றாலும் இருவரும் என்ன பேசினார்கள் என்ற விவரம் தெரியாததால், நான் என்னையே தேற்றிக்கொண்டு ஏதும் எழுதாமல் விடுத்தேன். விரைவில் அதுபற்றிய விவரம் இயக்கத் தோழர்களுக்கு அறிவிக்கப்படும் என்று நம்புகிறேன்"— என்று குறிப்பிட்டிருந்தார்.

இதைத் தொடர்ந்து கழகத்தில் இரு கூறுக கருத்துவேற்றுமை வளர்ந்தது. அடுத்து கோவையில் நடைபெற்ற முத்தமிழ் மாநாட்டில் பெரியாருக்கும்—அண்ணாவுக்குமிடையே இது குறித்து வாக்குவாதம் போல பேச்சும் நடைபெற்றது. (இதன் விவரம் பிறகு எழுதுகிறேன்) என்றாலும் அம்மாநாட்டில்கூட ஆச்சாரியார் சந்திப்பு பற்றிய விவரங்களைக் கூற மறுத்துவிட்டார் பெரியார்!

அம்மாநாட்டில் அண்ணா பேசுகையில் பெரியார், அவர்களும் ஆச்சாரியாரும் சந்தித்துப் பேசிய விவரங்களைப் பெரியார் அவர்கள் நம்மிடம் தெரிவிக்க மறுக்கும் வகையில் நமது இயக்கத்திற்கு ஏதோ விபரீதம் ஏற்படுமோ என்ற அச்சமும் வளர்ந்துகொண்டேதானிருக்கும் என்று திட்டவட்டமாகக் கூறினார். சிலர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சத்தம் போட்டனர். பெரியாரைச் சந்தேகிப்பது. தவறு என்று ஒரு சார்பிலும், அப்படியானால் ஏன் மனம்விட்டு நம்மிடம் சொல்லத் தயங்கவேண்டும் என்று மற்றொரு சார்பிலும் சர்ச்சை வளர்ந்து மாநாடு கருத்துவேற்றுயுடன் முடிந்தது.

பிறகு இரண்டொரு திங்கள்கள் கடந்து, மணியம்மையைத் திருமணம் செய்துகொண்டால்; சட்டப்படி ஏதாவது குடும்பத் தகராறு ஏற்படுமா யென்பதை, அன்று பெரியார் அவர்களது குடும்ப வழக்கறிஞராயிருந்த சேலம் விசயராகவாச்சாரியாருக்குத் துணை வழக்கறிஞராயிருந்த ஆச்சாரியாரைக் கேட்டால்தான் உண்மை தெரியும் என்பதற்காகவே டெல்லியிருந்த ஆச்சாரியாரோடு பெரியார் தொடர்பு கொண்டார் என்பதும், அதற்கேற்ப திருவண்ணாமலையில் பேட்டியளித்தார் என்பதும் நாடறிய தெரிந்தது.

இந்த உண்மை வெளியானதும் அண்ணா அவர்கள், என்ன நடராசன் நான் அன்று கூறியது சரிதானா? இந்த அண்ணாவுக்கு எல்லாமே சந்தேகம்தான் என்று கூட சலிப்புடன் கூறினாயே இப்போது தெரிகிறதா விவகாரம் என்று என்னைக்கேட்டார்.

ஆக, எந்த ஒரு பிரச்சினையாயினும் மிக நுணுக்கத்தோடு அதைக் கூர்ந்து ஆராய்ந்து நிதானமாக ஆனால் திட்டவட்டமான அபிப்ராயத்தை வழங்குவதில் அன்றுமுதலே அண்ணா அவர்கள் கழகத்திற்கு பெருந்துணையாக இருந்துவந்திருக்கிறார்கள்.

[தொடரும்]

10-ம் பக்கத் தொடர்ச்சி

நங்கல், ஹீராகுட் போன்ற பெரிய அணைக் கட்டுகளும், இன்னேரன்ன எற்றமிகு பெரிய பெரிய தொழிற்சாலைகளையெல்லாம் வடக்கேயே நிறுவிக்கொண்டு தென்னுட்டை ஏய்த்து வாழுகின்ற வடவர்களிடம் திராவிடம் அடங்கிக் கிடப்பானேன்? என்று திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கிறது. திராவிட நாடு என்று பிரிவினை பேசாதே என்று சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிருர்கள் இந்தியப் பாராளுமன்றத்தில்! சுதந்திரமாகப் பேசவும், எழுதவும், செயல் படவும் உரிமை பெற்ற சனநாயகம் இந்தியாவில் கேலிக்கூத்தாக்கப் படுகிறது! பாரதப் புத்திரர்களால்! சுதந்திரம் கேட்க உனக்கு என்ன உரிமை யிருக்கிறது என்று லோகமான்ய பால கங்காதர திலகர் சொன்ஞர் 'சுதந்திரம் எனது பிறப்புரிமை' (Freedom is my birthright) என்று. அதையே தான் நாங்களும் திருப்பிச் சொல்ல விழைகிரும். 'திராவிடம் எங்களது பிறப்புரிமை (Dravidam is my birthright) என்று! தன் தாயை தாய் என்று அழைக்க ஒவ்வொரு மகனுக்கும் உரிமை உண்டு! அதேபோல் திராவிடம் எனது தாயகம் என்று சொல்லிக் கொள்ள ஒவ்வொரு திராவிடனுக்கும் உரிமை உண்டு! தாயின் நலத்திலும் வாழ்விலும்ஒவ்வொரு மகனுக்கும் அக்கரை உண்டு!

அதேப்போல் திராவிடர்கள் எழில் பெறவும், வளம் பெறவும், ஏற்றமுறவும் திராவிடநாடு திராவிடருக்காக வேண்டும் என்று சொல்லவும், அதற்காகப் போராட வும் ஒவ்வொரு திராவிடனுக்கும் உரிமை உண்டு. திராவிடநாடு திராவிடருக்காகிவிடுமேயானுல் திராவிடத்தைச் சுரண்டி வாழ முடியாதே என்று வடவர்களும், வடவர்தம் தாளில் வீழ்ந்து அவர்தம் சேவடித்தொழுது அவர்கள் தரும் பிச்சைக் காசுக்காக கையேந்தி திராவிடத்தைக் காட்டிக்கொடுத்து உயிர்வாழும் சதை பிண்டங்களும், கூலிகளும், கங்காணிகளும் தங்களின் ஏகபோக வாழ்வு இடிந்துவிடுமே என்று ஏக்கமுறுகிருர்கள்! அதனுல் திராவிட நாட்டின் விடுதலையை எதிர்க்கிருர்களே தவிர வேறல்ல!

சட்டம் வந்துவிட்டது என ஆர்ப்பரிக்கும் அருமைத் தோழர்களே!

ரஷ்யாவில் ஜார்மன்னனை வீழ்த்திஞர்கள்! வெற்றிக்கொடி நாட்டிஞர்கள் பாட்டாளிகள்! மாபெரும் வீரர்களாம் முசோலினி, நெப்போலியன், ஹிட்லர் போன்றவர்களே போன இடம் தெரியவில்லையென்ருல், கேவலம்! இலட்சக்கணக்கான எதையும் செய்துமுடிக்கும் ஆற்றல்பெற்ற அடலேறுகளாம், அஞ்சாநெஞ்சம் கொண்டோராம் திராவிடத்துத் தம்பிமார்களைப் பெற்றிருக்கிற ஆற்றல்மிக்க அறிஞர் அண்ணுவின் மக்கள் பாசறையாம் தி. மு. கழகத்தை பாரதப் புத்திரர்களின் உளுத்துப்போனச் சட்டம் என்ன செய்துவிட முடியும்? சட்டத்தை மீறினுல் உயிர் தானே பறிப்போகும்! அவ்வளவுதானே! அரசியலில் அடியெடுத்துவைத்த நாங்கள் வீரச்சாவை அணைத்திடவே அடியெடுத்துவைத்திருக்கிரும் - அஞ்சவில்லை!

வடநாட்டு ஏகாபத்தியக் காரர்களே! திராவிடம் திராவிடர்களுக்கு உரிமையுடையது என்று வரலாறு என்ற உரிமைச்சாசனம் எடுத்தியம்புகிறது! எங்கள் தாயகத்தை உங்களுக்கு உரிமையுடையது என்று சொல்லிவிட்டால் சும்மா விட்டு விடுவோம் என்று கருதாதீர்கள்! நாங்கள் வரலாற்றைப் படித்தவர்கள்; வீரப் பரம்பரையிலேத் தோன்றியவர்கள்! ஏமாளிகளல்லர்; ஏற்றமிகு வரலாற்றைப்பெற்றவர்கள்! வீரர்களே! தீரர்களே! இளைஞர் ஏறுகளே! திராவிடநாடு திராவிடருக்கே என்று முழங்கி, எழுச்சிக்கொண்டு எழுவீர்! பெறுவோம் திராவிடத்தை; 'அறிஞர் அண்ணு'வின் தலைமையில்! இது உறுதி! உறுதி!!

●

## ஏஜெண்டுத் தோழர்களுக்கு

—(0)—

வணக்கம்,

ஜூன் மாதம் முடிய பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. உடன் அதற்கான தொகையை தவருது அனுப்பிவைக்க வேண்டுகிரும்

**நிர்வாகி: 'திராவிடன்'**

## வீராங்கனை வாலண்டினு!

விண் வெளியில் பூமியை வலம் வந்த முதல் பெண்மணி வாலண்டினுவை மனமாரப் பாராட்டுகிரும். விண் வெளியில் முதன் முதலில் பூமியை வலம்வந்த ருஷ்ய வீரர் காகரின், உலக நாடுகள் பலவும் சென்றது போல் வாலண்டினுவும் உலகெங்கும் சுற்றுப் பயணம் மேற்கொள்ளப் போவதாக அழிகிரும். உலக நாடுகளிடையே அரசியல் வேற்றுமைகள் எவ்வளவோ யிருப்பினும் ருஷ்ய வீராங்கனை வாலண்டினுவின் அரிய சாதனையை எல்லா நாட்டினரும் மனமாரப் பாராட்டி உற்சாகமூட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை.

வாழ்க வாலண்டினு!

**ஆசிரியர்**
**என்.வி.என்.**

# ஆசிரியருக்கு மடல்!

# யாருக்கு உபதேசம்?

——(0)——

அன்புடையீர்,

இந்திய துணைநிதி அமைச்சர் திருமதி தாரகேசுவரி சின்கா அவர்கள், சென்னை கோபாலபுரம் இந்திய மாதர் சங்கத்தின் ஆண்டு விழாவில் பேசிய பேச்சின் சில கருத்துக்களைக் கண்டு வியந்தேன். **பெண்கள் தங்க நகைகள் மீது மோகத்தைக் கைவிட வேண்டுமென்று அமைச்சர் உபதேசம் செய்திருக்கிருர்.** அவரது உபதேசம் எந்த அளவுக்கு மதிக்கப்படும் அல்லது பயன்படும் என்பதை அம்மையார் ஆழ்ந்து சிந்திக்காதது ஏனே?

உபதேசம் செய்ய முன்வந்த பெண் அமைச்சர் தங்க நகைகளை அணியாமலிருந்தாரா என்ருல், அணிந்து கொண்டிருந்தார். அதுவும் 22 காரட் தங்கத்தால் செய்த நகைகள்!

தாம் மட்டும் 22 காரட் தங்க நகைகளை அணிந்து அலங்காரம் செய்துகொண்டு, மற்ற பெண்களுக்கு தங்க நகை மீது ஆசை வைக்கக் கூடாது என்று உபதேசம் செய்ய முன்வருவது வேடிக்கையா யிருக்கிறது. இந்த உபதேசம் எந்தப் பெண் மனதைத்தான் தொட முடியும்?

இவ்வாறு உபதேசம் செய்ய வரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் போதாகிலும் தங்க நகைகளைக் கொண்டு அலங்காரம் செய்யாமல் வரலாமே அல்லது 14 காரட் தங்க நகைகளையாவது அணிந்து வரலாமே!

அதை விடுத்து, தங்கத்தால் செய்த உருத்திராட்ச மாலை, கழுத்துச் சங்கிலி, கை வளையல்கள், கழுத்திலே டாலர்கள், பட்டுப் பீதாம்பரம் ஆகியவைகளை அணிந்துகொண்டு இளம் பெண்கள் ஆரத்தி எடுக்க பவனி வந்து தங்க ஆசனத்தில் அமர்ந்துகொண்டு மண்ணுசை, பொன்னுசை, பெண்ணுசை கூடாது என்று பிறருக்கு உபதேசம் செய்யும் மடாதிபதிகளுக்கும் இந்தப் பெண் அமைச்சரின் உபதேசத்திற்கும் ஏதாவது வித்தியாசம் காண முடியுமோ!

காங்கிரஸ் ஆட்சியில் சூளைக் கல்லுமா பிடாரிகளாய் இருப்பது? வெட்கக் கேடு!

வணக்கம்

**மணிமேகலை, சென்னை.**

○

**ஆசிரியர் குறிப்பு:** முதல் கோணல், முற்றும் கோணல் என்பார்கள். அதுபோல இந்திய அரசின் தலைமை அமைச்சரே முன்னுக்கு முரணுகப் பேசி உளுத்துப்போன உபதேசம் செய்யும்போது குட்டி அமைச்சர்களைப் பற்றி சொல்லவா வேண்டும்?

## வாசகர்களுக்கு வேண்டுகோள்

——(00)——

அன்புடையீர்,

அச்சு இயந்திரக் கோளாறினுல் மீண்டும் இவ்வாரம் மட்டும் 10 பக்கங்களாக வெளியிடப்பட்டிருக்கிறது. அடுத்த வாரம் வழக்கம்போல 12 பக்கங்களாக வெளிவரும். வாசகர்கள் பொருத்தருளுக.

வணக்கம்.

**நிர்வாகி—திராவிடன்**

பதிவு எண்: 7178 திராவிடன் தொலைபேசி 33581

# எங்கள் தாயகம்!

சேர சோழ பாண்டியர்கள் என்ற மூவேந்தர்களால் சீரோடும் சிறப்போடும் ஆளப்பட்டு வந்த நிலப்பகுதிதான் அன்றையத் தமிழகமாகிய திராவிட நாடு! தமிழகம், கேரளம், கருநாடகம் ஆந்திரம் ஆகிய நிலப்பகுதிகள் தான் இன்றையத் திராவிட நாடு! அன்று திராவிட நாட்டின் ஆட்சி மொழியாக மாட்சிமையோடு விளங்கியது தமிழ்! இன்றையத் திராவிட நாட்டில் தமிழும், தமிழிலிருந்துக் கிளைத்த மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளும் பேசப்பட்டு வருகிறது. தமிழை வளர்த்திடும் தகுதிமிகு புலவர்களைப் போற்றிப் பாராட்டியதன் வழியாகத் தமிழை வளர்த்தார்கள்! தன்னிகரற்று விளங்கிய தமிழ் புரவலர்கள் சங்கங்கள் நிறுவித் தமிழைப் பேணி பாதுகாத்தார்கள் தமிழ் மன்னர்கள். இனிமைமிகு தமிழால், அழகு நடையால் பாடப்படும் பண் கேட்டுப் பரவசப்படும் புரவலர்கள் ஏராளம்! ஏராளம்! இத் திராவிடத்தில் தமிழால் முடியுமா? எனக் கேட்கும் தரங் கெட்டோரே! கேண்மின்! கேண்மின்!

பண்டைத் தமிழகத்தில் எங்ஙனும் தமிழ் செங்கோலோச்சியது! சட்டங்கள் தமிழில் ஆக்கப்பட்டிருந்தது! எல்லாம் தமிழ் எங்கும் தமிழ்! இயற்கை மொழி தமிழ்! ஏனெனில் அம்மா என அழகுத் தமிழ் உதிர்க்கிறது. அழகுமிகு மழலைச் செல்வம்! இயற்கைச்செல்வங்களாம் ஆடும் மாடும் அம்மா எனவே அழைக்கிறது தமிழால்! இங்கு மட்டுமல்ல—இங்கிலாந்தில் கூட வாழ்கிற மாடு அம்மா என்று அழைக்கிறதே தவிர 'மதர்' என்று ஆங்கிலத்தில் அழைப்பதில்லை! இத்தகு ஏற்றமிகுத் தமிழை அழிக்க முனைகிருர்கள் இந்தி வெறியர்கள்! தொல்காப்பியத்தைப் பெற்றத் தமிழை வீரத்தை ஊட்டுகின்ற உயர்காவியமாம் புறத்தையும் காதலைப் பற்றி விளக்குகின்ற கவின்மிகு பேரிலக்கியமாம்—அகத்தையும், போர் நிகழ்ச்சிகளை வீரம் துள்ளும் தமிழால் விளக்கிக் காட்டும் கலிங்கத்துப் பரணியையும், கலித்தொகையையும், கற்பின் பெருமை கூறும் சிலப்பதிகாரத்தையும் ஐம்பெருங் காப்பியத்தையும், மற்றும் பற்பல எழில்மிகுப் பேரிலக்கியங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றத் தமிழை அழிக்க வரும் இந்தியை அழித்திட எழுவீர்! எழுவீர்! லம்பாடி இந்திக்கு வரவேற்பு கூறும் கங்காணிகளுக்குப் புத்தி புகட்டிட முனைவீர்! முனைவீர்!

திராவிடம் பண்டைக் காலத்தில் செல்வ வளத்தில்,மாட்சிமையோடு விளங்கிற்று எனின் மிகையன்று! கிரேக்கத்திற்கும், யவனத்திற்கும் மிளகையும், சந்தனத்தையும், வாசனைத் திரவியங்களையும் முத்தையும் அனுப்பித் தன் செல்வ வளத்தைப் பெருக்கிக் கொண்டது எனின் மிகையன்று. திராவிடத்து முத்துக்களை கிரேக்கத்துப் பேரழகிகள் விரும்பி வாங்கி அணிந்து கொண்டார்கள் எனின் தமிழகத்து முத்துக்களின் பெருமையினை எடுத்தியம்பவும் வேண்டுமோ! தன்னுடைய போதை யூட்டும் பேரழகால், விழியின் சுழற்சியால் பேரரசர்களை மயக்கி மண்டியிடச் செய்து வரலாற்றையே திருப்பிய அழகி கிளியோபாட்ரா மதுவில் தமிழகத்து முத்துக்களை இட்டு குடித்து மகிழ்வாள் எனின் தமிழகத்து முத்துக்களின் பெருமையினை என்னென்பது! தமிழகத்து வளத்தினை உருத்திரங் கண்ணனார் படம் பிடித்துக் காட்டுகிருர் பாடல் வாயிலாக! காணீரோ!

"அந்நகர்வியன் முற்றத்துச்
சுடர்நுதல் மடநோக்கின்
நேரிழை மகளீர் உணங்குணாக்
[கவரும்
கோழியெறிந்த கொடுங்கோல்
[கனங்குழை
பொற்கால் புதல்வர்
[புரவியின்(று) உருட்டும்
முக்கால் சிறுதேர்முன்வழி
[விலக்கும்
விலங்குபகையல்லது
[கலங்குபகையறியாக்
கொழும்பல் குடிச்செழும்
[பாக்கத்து
குறும்பல்லூர்
[நெடுஞ்சோணாடு."

முற்றத்தில் நெல் உலர்த்தப் படுகிறது. காவலாக அங்கே இளம்பெண்கள் அமர்ந்திருக்கிருர்கள். கோழிகள் வந்து நெற்களைத் தின்னுகின்றன. கோழிகளை விரட்டக் கற்களோ, மற்ற எதுவுமோ இல்லாத நிலைமையில் பெண்டீர்கள் தங்களுடையக் காதுகளில் அணிந்திருக்கிற கனங் குழை என்கின்ற காதணியைக் கழற்றி கோழிமேல் வீசுகிருர்கள். விரட்டுகிருர்கள் எனின் எந்தளவுச் செல்வத்தில் மேம்பட்டிருந்தால் தங்கள் காதுகளிலேயுள்ள பொன் காதணியை கோழிகளை விரட்ட உபயோகித்திருக்கக் கூடும் என எண்ணினுல், தமிழகத்தின் செல்வநிலை தெள்ளெனப் புலப்படும்.

பொருள் மிகுபட யிருந்தால் தான் மற்றவர்களுக்கு அள்ளி வாரி வழங்கமுடியும். நல்லச் செல்வச்செழிப்பில் சிறந்து விளங்கியத் தமிழகம் எங்ஙனும் அறச்சாலைகள் நிறுவப்பட்டிருந்தன. அந்த அறச்சாலைகளின் சமையலறையிலிருந்துச் சோறு வடித்தக் கஞ்சி ஆறுபோலப் பரந்துச் சென்றது என்பதை உருத்திரங் கண்ணனார் விளக்குகிருர் பாரீர்!

## ம. சச்சிதானந்தம்

'சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோல பரந்தொழுகி
… … … … …"

இந்தளவுச் செல்வச்செழிப்பில் சிறந்து விளங்கியத் திராவிடம் இன்றிருக்கும் இழிநிலைதான் என்னே? அதோச் செல்கிருன் பாருங்கள் செல்வம்! பெயர் செல்வமே தவிர அவன் வறுமையின் கோரப்பிடியிலேச் சிக்குண்டவன்! படித்தவன்தான்—பட்டம் பெற்றவன்தான்!

"இரந்தும் உயிர்வாழ்தல்
[வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றியான்"

என்று சொல்லிச்சென்ற வள்ளுவனின் வழிவந்தவன்தான்! படித்தவனுக்கு வேலைக்கிடைக்கவில்லை! உணவுச் சாப்பிட்டு நான்கு நாட்கள் ஆகின்றன. பசிபசி என வயிறு துடிக்கிறது; சுற்றுமுற்றும் பார்க்கிருன் …விழிகள் சுழலுகின்றன. அருகே எச்சில் தொட்டி … அதிலே உணவுவிடுதிகளிலிருந்துக் கொண்டுவரப்படுகிற எச்சில் இலைகள் வீசப்படுகின்றன. எச்சிலைச் சாப்பிடுவதா…? எண்ணம் எழத்தான் செய்தது. அறிவியல் படித்தவன்தான்!…பசி..பசி… …! அறிவியல் போன இடம் தெரியவில்லை! எச்சில் இலையை எடுத்துப் பதம்பார்த்தான்! என்னே! தமிழகத்தின் இழிநிலை! வெட்கம்! வெட்கம்!

"மயிர்நீப்பின் வாழாக்கவரிமா
[அன்னார்
உயிர்நீப்பர் மானம்வரின்"

என்ற குறள் நெறிவழி வாழ்ந்து வந்தத் தமிழன இந்நிலைக்கு ஆளானன்? அய்யகோ! திராவிடம் இத்தாழ்ந்த நிலைக்கு வரக் காரணம் யார்? நம்மை ஆண்டு வருகின்ற வடநாட்டு ஏகாதிபத்தியம் நம்மைச் சுரண்டிக் கொழுக்கிறதே தவிர, நம்மை வாழவிடவில்லை! வரலாற்றைப் புரட்டிப்பார்த்தால் திராவிடர்கள்

# இன்பத் திராவிடம்!

வடவர்களை அடக்கி ஆண்டு வந்திருக்கிருர்களே யன்றி வடவர்கள் திராவிடர்களை என்றுமே வென்றதில்லை என்பது புலப்படும்! சேரன் செங்குட்டுவன் வடநாட்டு அரசர்களாம் கனக விசயர்களின் தலைகளிலே கற்களை சுமக்க வைத்து வென்று வந்திருக்கிருன் கரிகால் சோழன் இமயத்திலே தன்னுடைய புலிக் கொடியை பொறித்துத் தமிழர்களின் வீரத்தை நிலைநாட்டி யிருக்கிருன். இராசேந்திர சோழன் வடவர் தமை வென்று வந்து வாகை சூடி கங்கை கொண்டான் எனச் சிறப்புப் பெயர் பெற்ருன். இவ்வாறெல்லாம் வடவர்களை அடக்கியாண்ட திராவிடன் வடவர்களுக்குத் தாள் பணிந்துக் கிடப்பானேன்?

ஆங்கிலேயர்கள் திராவிடம் அடங்கிய இந்தியாவை வடவர்களிடம் ஒப்படைத்து விட்டுச் சென்ருர்கள். நல்ல யோக்கியதை படைத்தவர்களா யிருந்தால் திராவிடத்தை திராவிடர்களின் கரங்களிலே ஒப்படைத்திருக்க வேண்டும்! ஒப்படைத்தார்களா? அல்ல! அல்ல! இந்நாள் வரை திராவிடத்தை திராவிடர்களின் கரங்களில் ஒப்படைக்காததே பெரிய குற்றம் என நான் குற்றம் சாட்டுகிறேன் இதை மறுக்க முடியுமா?

மொழியாலும், கலையாலும், நாகரீகத்தாலும் வேறுபட்ட நாம் வடவர்களுக்கு ஆண்டுதோறும் கோடிக் கோடியாக வரியைக் கொட்டிக் கொடுத்து விட்டு அவர்தம் தாள் பணிந்து கிடப்பானேன்? என்று திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கிறது.

ரூர்கேலா, பிலாய் போன்ற எஃகு உருக்குத் தொழிற்சாலைகளும் சிந்தரஞ்சனில் எஞ்சின் கட்டும் தொழிற்சாலையும், பக்ரா

(9-ம் பக்கம் பார்க்க)

### மொரார்ஜிக்கு ஒரு டோஸ்!

நெருக்கடி நிலையை (அவசரச் சட்டத்தை) நீக்குவது தற்கொலைக்கு ஒப்பாகும்.

—கல்கத்தா காங்கிரசு ஊழியர் கூட்டத்தில் மொரார்ஜி தேசாய்

நெருக்கடி நிலையை துணையாகக் கொண்டு எதிர்க் கட்சிகளின் உரிமைகளைப் பறிப்பது (அதாவது ஜனநாயகத்தைச் சீர்குலையச் செய்வது) பயங்கரமான படுகொலையாகும் என்பதை நிதிஅமைச்சர் மொரார்ஜி தேசாய் உணருவாரா?

ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி—சோமு அச்சகம், 16, இப்ராகிம் சேட் தெரு, சென்னை-1